| நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
| --- | --- |

செ.வெ.எண்: 31 நாள்:23.06.2021

***வருவாய் தீர்வாயம் (ஜமபந்தி) நிகழ்ச்சியில் 29 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் வழங்கினார்.***

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (23.06.2021) ஓசூர் வட்டத்திற்குட்பட்ட ஓசூர் நகர்புரம், ஓசூர் கிராமபுரம், ரங்கபண்டித அக்ஹாராம், சென்னத்தூர் வடக்குபகுதி, சென்னத்தூர் தெற்கு பகுதி, ஆவலப்பள்ளி, நல்லூர், பேகேப்பள்ளி, கோவிந்த அக்ரஹாரம், ஜூஜூவாடி, சாந்தபுரம் அக்ரஹாரம், அனுமேபள்ளி மற்றும் மூக்கொண்டப்பள்ளி ஆகிய கிராமங்களுக்கான 1430 ஆம் பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) இறுதி நாளான இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குட்பட்ட, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி, பர்கூர், போச்சம்பள்ளி, ஒசூர், சூளகிரி, தேன்கனிக்கோட்டை மற்றும் அஞ்செட்டி ஆகிய வட்டங்களில் 16.06.2021 முதல் 23.06.2021 வரை பசலி 1430-ஆம் ஆண்டுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டத்திற்கு வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சியில், உட்பிரிவு தொடர்பாக 74 மனுக்களும், உட்பிரிவு அல்லாத பட்டா மாற்றம் தொடர்பான 18 மனுக்களும், முதல் பட்டதாரி சான்றிதழ் கோரி 3 மனுக்களும், வாரிசு சான்று கோரி 11 மனுக்களும், பிறப்பு சான்று கோரி 2 மனுக்களும், முதியோர் உதவித்தொகை கோரி 22 மனுக்களும், புதியதாக குடும்பஅட்டை கோரி 6 மனுக்களும், இலவச வீட்டுமனைப் பட்டா கோரி 16 மனுக்களும், மாற்றுத்திறனாளி உதவித்தொகை கோரி 6 மனுக்களும், விதவை உதவித்தொகை கோரி 8 மனுக்களும், கலப்பு திருமண சான்று கோரி 1 மனுவும், இதர இனங்கள் 23 மனுக்கள் என மொத்தம் 190 மனுக்கள் வரப்பெற்றுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தகுதியான மனுக்கள் மீது ஒரு வார காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதனைத்தொடர்ந்து, இன்று (23.06.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை 2 நபர்களுக்கும், வாரிசு சான்று 4 நபர்களுக்கும், முதியோர் உதவித்தொகை 2 நபர்களுக்கும், மாற்றுத்திறனாளி உதவித்தொகை 4 நபர்களுக்கும், விதவை உதவித்தொகை 3 நபர்களுக்கும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்ட உதவித்தொகை 3 நபர்களுக்கும், பட்டா மாறுதல் 4 நபர்களுக்கும், உட்பிரிவு பட்டா மாறுதல் உத்தரவு 7 நபர்கள் என மொத்தம் 29 நபர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில், மாநகராட்சி ஆணையாளர் (ஓசூர்) திரு.எம்.செந்தில்முருகன், ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திரு.சேதுராமலிங்கம், வட்டாட்சியர் (ஓசூர்) திரு.ச.செந்தில்குமார் உட்பட துறை சாந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| **முககவசம் அணிவீர்** | **தனிமனித இடைவெளி கடைப்பிடிப்போம்** |